பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
06 09 2025 SATURDAY 6.30 PM
<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் வர்த்தகத்தை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி எதிர்கால தலைமுறையினருக்கு அடித்தளமாக அமையும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

- மாணவர்களிடையே போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

- சீன சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha – தாய்லாந்தின் Pruchya Isaro இணை பட்டம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் வர்த்தகத்தை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், தனியார் நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், நிதி சாரா துறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

நம்பிக்கை அடிப்படையிலான பொருளாதார நிர்வாகத்தை வலுப்படுத்தும் வகையிலும், வர்த்தகம் புரிவதை எளிமையாக்கும் வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகளில் மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் பங்கேற்க வேண்டும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி எதிர்கால தலைமுறையினருக்கு அடித்தளமாக அமையும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு புத்தொழில் நிறுவனங்கள் சிறந்த தளமாக அமையும் என்று கூறினார்.

புதிதாக தொழில் தொடங்குவது குறித்த ஆலோசனைகள் இளம் தொழில் முனைவோருக்கு உத்வேகம் அளித்திடும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டவும், உலக அளவில் புத்தொழில் மையமாக இந்தியாவை உருவாக்குவதிலும் இளைஞர்கள் பங்களிக்க வேண்டும் என்று திரு ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

மாணவர்களிடையே போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், இதற்கென மாநில அரசு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக கூறினார்.

அனைத்துப்பள்ளிகளிலும் இந்த சட்டம் குறித்த அறிவிப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மாணவர்களின் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பள்ளிகளில் பாலியல் குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் போதைப்பொருள் நடமாட்டம் முற்றிலும் தடுக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், இப்பகுதி மக்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

தோல் தொழிற்சாலை உரிமையாளர்களின் மின்சார கட்டணம் மற்றும் வரி உயர்வு தொடர்பான பிரச்சினைகள் குறித்து மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாணப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் கொண்டுவர வேண்டும் என்ற நோக்குடன் கூட்டணியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை பிஜேபி மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் மத்திய அரசுடன் இணக்கமாக செயல்பட்டால்தான் மாநிலத்தின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் என அனைத்துத்தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்பதாக கூறினார்.

இந்த வரி சீர்திருத்த நடவடிக்கை அமெரிக்க வரி விதிப்பிலிருந்து வர்த்தகர்களை பாதுகாக்கும் என்று திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று சேலம் மாவட்டத்தை சேர்ந்த திருமதி இந்துஜா மற்றும் கணக்கு தணிக்கையாளர் திரு சீனிவாசன் தெரிவித்தனர்.

*(Voice Byte – இந்துஜா - சீனிவாசன்- 32 Sec. )*

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த இரு தினங்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ண்ன - 48 Sec. )*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் தாமல் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை மாநில அமைச்சர் திரு காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

மதுரை மாவட்டம் கோரிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கட்டப்பட்டுவரும் மேம்பாலப்பணிகளை மாநில அமைச்சர்கள் திரு எ வ வேலு, திரு மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

--------------

வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் இன்று நடைபெற்றது.

-------------

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் மாநில அரசு சார்பில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாமில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

---------------

*தமிழ்நாடு காவலர் தினத்தையொட்டி நாமக்கல், தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டம் உதகையில் காவல்துறையில் பயன்படுத்தப்படும் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் குறித்த கண்காட்சி இன்று நடைபெற்றது.*

*<<<<<>>>>>*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*சீனா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha – தாய்லாந்தின் Pruchya Isaro இணை பட்டம் வென்றது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 6-7, 10-8 என்ற செட் கணக்கில், தைவானின் Jason Jung – அமெரிக்காவின் Reese Stalder இணையை வென்றது.*

*--------------*

*ஜெய்பூரில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய ஜுனியர் ஸ்குவாஷ் போட்டியில், ஆடவர் பிரிவில் Yusha Nafees-ம், மகளிர் பிரிவில் ருத்ரா சிங்கும் பட்டம் வென்றனர்.*

*-------------*

*ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி ஆடவர் பிரிவில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.*

*பீகாரின் Rajgir -ல் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30 க்கு தொடங்குகிறது.*

*------------*

*ஆசியக்கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா - ஜப்பான் இடையே இன்று நடைபெற்ற ஆட்டம் டிரா ஆனது.*

*சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல் அடித்தன.*

*---------------*

*புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆடடங்களில் பாட்னா – பெங்களுரு அணியையும், தமிழகம் – குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.*

*------*

*23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.*

*Doha-வில் இப்போட்டி இரவு மணி 10.30-க்கு தொடங்குகிறது.*

*<<<<<END>>>>>*